C

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

## பன்னிரெண்டாம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

நேரம்: 1.30

பதிவு எண் : | | | | | | |

மதிப்பெண்கள்: 50

பகுதி - அ

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க

1. முழுமை பெறா பதிவேடுகள் பொதுவாக பராமரித்து வருவது
   அ) நிறுமம் ஆ) அரசு
   இ) சிறிய அளவிலான தனியாள் வணிகம் ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்
2. தொடக்க நிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது
   அ) தொடக்க முதல் கண்டறிய ஆ) இறுதி முதல் கண்டறிய
   இ) இலாபம் கண்டறிய ஈ) நட்டம் கண்டறிய
3. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு
   இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
4. கடனாளிகள் தொடக்க இருப்பு ரூ.30,000, பெற்ற ரொக்கம் ரூ.1,00,000, கடன் விற்பனை ரூ.90,000, கடனாளிகள் இறுதி இருப்பு?
   அ) ரூ.30,000 ஆ) ரூ.1,30,000 இ) ரூ.40,000 ஈ) ரூ.20,000
5. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு
   அ) பெயரளவு கணக்கு ஆ) சொத்துக் கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
6. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
   அ) இலாபம் அல்லது நட்டம் ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
   இ) உபரி அல்லது பற்றாக்குறை ஈ) நிதிநிலை
7. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது
   அ) ஒரு சொத்து ஆ) ஒரு பொறுப்பு
   இ) ஒரு செலவு ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று
8. கூட்டாளிகளிடம் நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மை சட்டம் 1932ன் படி வழங்கப்படும் வட்டி வீதம்
   அ) ஆண்டுக்கு 8% ஆ) ஆண்டுக்கு 12%
   இ) ஆண்டுக்கு 5% ஈ) ஆண்டுக்கு 6%
9. பின்வருவனவற்றில் எது இலாப நட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும்?
   அ) அலுவலகச் செலவுகள் ஆ) பணியாளர் ஊதியம்
   இ) கூட்டாளியின் ஊதியம் ஈ) வங்கி கடன் மீதான வட்டி
10. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
    அ) 5.5 மாதங்கள் அ) 6 மாதங்கள்
    இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்

பகுதி - ஆ

II. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5 x 2 = 10

(வினா எண் 17 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

11. கூட்டாண்மை - வரைவிலக்கணம் தருக.

12. நிலை அறிக்கை என்றால் என்ன?

13. உயில் கொடை என்றால் என்ன?

14. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து லாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| ஆண்டின் தொடக்க முதல் | 5,00,000 |
| ஆண்டின் இறுதி முதல் | 8,50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 1,20,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 70,000 |

15. பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ரூ. |
|---|---|
| 1.4.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 2,600 |
| அவ்வாண்டில் வாங்கிய எழுதுபொருள்கள் | 6,500 |
| 31-3-2019 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 2,200 |

16. 2018 ஆம் ஆண்டில் மேத்யூ என்ற கூட்டாளி எடுத்த எடுப்புகள் ரூ.20,000, எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10% என கணக்கிடப்பட்டது. 2018 டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

17. இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.

பகுதி - இ

III. ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி. 5 x 3 = 15

(வினா எண் 24க்கு கட்டாயம் விடையளிக்கவும்)

18. முழுமைபெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை?

19. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதிக் கணக்குகளில் ஆண்டுச் சந்தா எவ்வாறு கையாளப்படுகிறது?

20. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.

21. பின்வரும் விவரங்களில் இருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று முதல் | 40,000 |
| 2019 மார்ச் 31 அன்று முதல் | 50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 7,000 |
| அவ்வாண்டில் இலாபம் | 8,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | ? |

22. ஒரு சங்கத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டு சந்தா மூலம் பெற்ற வருமானத்தைக் கணக்கிடவும்.

| விவரம் | 1.1.2018 (ரூ.) | 31.12.2018 (ரூ.) |
|---|---|---|
| பெற வேண்டிய சந்தா | 10,000 | 7,000 |
| முன்கூட்டிப் பெற்ற சந்தா | 3,000 | 5,000 |

23. மன்னன் மற்றும் ரமேஷ் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2018 ஏப்ரல் 1 அன்று அவர்களின் முதல் முறையே மன்னன் ரூ.1,50,000 மற்றும் ரமேஷ் ரூ.1,00,000 ஆகும். அவர்களின் நடப்புக் கணக்குகள் ரூ.25,000 மற்றும் ரூ.20,000 என வரவிருப்பைக் காட்டியது. 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% எனக் கணக்கிட்டு அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

24. பின்வரும் தகவல்களில் இருந்து கடன் விற்பனையைக் காணவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,00,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,30,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| உள் திருப்பம் | 25,000 |
| 2019 மார்ச் 31 அன்று கடனாளிகள் | 1,20,000 |

பகுதி – ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 3 x 5 = 15

25. அ) நிலை அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை தரவும்.

*(அல்லது)*

ஆ) நிலை முதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

26. அ) 2017 ஏப்ரல் 11 அன்று கணேஷ் ரூ.75,000 முதலுடன் தொழில் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளை பராமரிக்கவில்லை. 31.03.2018 ஆம் நாளைய அவருடைய ஏடுகளின் விவரங்கள் பின்வருமாறு :

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| ரொக்கம் | 5,000 | கடனாளிகள் | 16,000 |
| சரக்கிருப்பு | 18,000 | கடனீந்தோர் | 9,000 |
| பெறுதற்குரிய மா.சீட்டு | 7,000 | வங்கி ரொக்கம் | 24,000 |
| அறைகலன் | 3,000 | செலுத்தற்குரிய மா.சீட்டு | 6,000 |
| நிலம் மற்றும் கட்டடங்கள் | 30,000 | | |

அவ்வாண்டில் தன்னுடைய சொந்தப் பயனுக்காக அவர் ரூ.15,000 எடுத்துக்கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ரூ.20,000. அவருடைய இலாபம் அல்லது நட்டத்தைக் கண்டறியவும்.

*(அல்லது)*

ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| கைரொக்கம் (1.1.2018) | 4,000 |
| சம்பளம் கொடுத்தது | 3,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது | 10,000 |
| சந்தா பெற்றது | 15,000 |
| வாடகை பெற்றது | 2,000 |
| அச்சுக்கட்டணம் செலுத்தியது | 2,500 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 1,000 |
| தொடர்விளையாட்டுப் போட்டி வரவுகள் | 14,000 |
| தொடர்விளையாட்டுப் போட்டி செலவுகள் | 10,500 |
| முதலீடுகள் வாங்கியது | 25,000 |

27\. அ) பின்வரும் தகவல்களில் இருந்து பத்மினி மற்றும் பத்மா என்ற கூட்டாளிகளின் முதல் மாறுபடும் முதல் எனக்கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

| விவரம் | பத்மினி (ரூ.) | பத்மா (ரூ.) |
|---|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று முதல் (வ) | 5,00,000 | 4,00,000 |
| 2018 ம் ஆண்டில் எடுப்புகள் | 70,000 | 40,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 2,000 | 1,000 |
| 2018-ல் இலாபப்பங்கு | 52,000 | 40,000 |
| முதல் மீது வட்டி | 30,000 | 24000 |
| ஊதியம் | 45,000 | --- |
| கழிவு | --- | 21,000 |

***(அல்லது)***

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2017, ஏப்ரல் 1 அன்று பற்பல கடனீந்தோர் | 75,000 |
| 2017, ஏப்ரல் 1 செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 |
| கடனீந்தோருக்கு செலுத்திய ரொக்கம் | 3,70,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு செலுத்தியது | 1,00,000 |
| கொள்முதல் திருப்பம் | 15,000 |
| ரொக்கக்கொள்முதல் | 3,20,000 |
| 2018 மார்ச் 31 அன்று பற்பல கடனீந்தோர் | 50,000 |
| 2018 மார்ச் 31 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 |

******